# பொன்னியின் செல்வன் என்னும் வரலாற்றுப் புதினத்தில் ஆழ்வார்க்கடியானின் பாத்திரம்

# Alvarkadian's Role in the Historical Novel Ponni's Selvan

**முனைவர் மா.சங்கரேஸ்வரி, உதவிப்பேராசிரியர்,**
**கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி(தன்னாட்சி), கோவில்பட்டி**
**திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன்**
**இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா**

**2**

## Abstract

Delegation is one of the most necessary in Politics. Tolkappiyar, who formulated the grammer of life, mentions three types of divisions. Among them is the messenger section. Valluvarum has created a separate authority for Ottadal. Messenger is essential if a king is to rule a country well. There should be spies to protect the country from enemies and to make the king aware of the welfare of the people. Ponnin's Selvan Chola is a historical novel that heralds the Politics of the Pandyas. The one who can crawa as a Cholas in this messenger is Alvarkaiyan. From the beginning of the novel, the author has created this person who crawls with the people and created all the qualities of a single person. Although many Characters have given importance to the movement of the story, the character of Alvarkadiyan is not only the movement of the story but also the role of unraveling the unanswered puzzles in this novel.

Key Words : Ponni' Selvan, Alvarkadiyan,

**ஆய்வுச்சுருக்கம்**

அரசியலில் தூது என்பது மிகத் தேவையான ஒன்றாகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துள்ள தொல்காப்பியர் மூன்று வகையான பி ரிவுகளைக் குறிப்பிடுகிறார். அவற்றுள் தூது பி ரிவு ஒன்றாகும். வள்ளுவரும் ஒற்றாடல் என்பதற்கு தனியாக அதிகாரம் ஒன்று வகுத்துள்ளார். மன்னன் நன்முறையில் ஒரு நாட்டை ஆட்சிசெய்ய வேண்டுமென்றால் ஒற்றன் இருப்பது அவசியமாகும். நாட்டை எதி ரிகளிடமிருந்து பாதுகாக்கவும் மக்கள் நலனைப் பற்றி மன்னன் அறிந்து கொள்ளவும் ஒற்றர்கள் இருக்க வேண்டும். பொன்னியின் செல்வன் சோழ , பாண்டியர்களின் காழ்ப்புணர்ச்சி, அரசியலைப் பறைசாற்றும் வரலாற்றுப் புதினமாகும். இப்புதினத்தில் சோழர்களின் ஒற்றனாக வலம் வரக்கூடியவன் ஆழ்வார்க்கடியான். மக்களோடு மக்களாக வலம் வரும் இவனை ஒற்றனுக்கு ரிய அனைத்து தகுதிகளையும் படைத்து புதினத்தின் தொடக்கம் முதல் ஆசி ரியர் உலாவ விட்டுள்ளார். எத்தனையோ பாத்திரங்கள் கதை நகர்விற்கு முக்கியத்துவம் அளித்திருந்தாலும் ஆழ்வார்க்கடியான் பாத்திரம் கதை நகர்விற்குமட்டுமின்றி விடை தெரியாத புதிர்களை அவிழ்க்கும் பாத்திரமாக இப்புதினத்தில் அமைகின்றது.

முக்கியச் சொற்கள் : பொன்னியின் செல்வன், ஆழ்வார்க்கடியான், ஒற்றன்

**முன்னுரை**

சிறுகதை, புதினம் இவை புனைகதை இலக்கியங்களாகும். புதினங்களில் வரலாற்றுப் புதினங்களைப் படைப்பதில் கல்கி தலைச் சிறந்தவராகக் கருதப்படுகிறார். இவர் எழுதிய வரலாற்றுப்

புதினங்களுள் பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம், பார்த்திபன் கனவு குறிப்பிடத்தக்கதாகும். இவற்றுள் பொன்னியின் செல்வன் சோழ , பாண்டியர்களின் இடையே நடைபெறும் பூசல்களை எடுத்துரைக்கின்றன. அதுமட்டுமின்றி சோழர்களின் வரலாற்றையும் அவர்களின் சிறப்புகளையும் இப்புதினத்தில் அறியலாம். பாத்திரப்படைப்பு புதினத்தின் கருவை(கதையை) நகர்த்திச் செல்வதில் முக்கியமான கூறாகும். தலைமைப் பாத்திரம் அருள்மொழிவர்மன் அதனைத் தொடர்ந்து வந்தியதேவனைக் கூறலாம். குந்தவை , நந்தினி, பூங்குழலி, பெரிய பழுவேட்டரையர் , சின்ன பழுவேட்டரையர், ஆழ்வார்க்கடியான் என்று பல பாத்திரங்கள் கதை நகர்வு , விறுவிறுப்பு தன்மை இவற்றிற்கு வலுசேர்க்கின்றன. இவற்றில் துணைமை பாத்திரமான ஆழ்வார்க்கடியனை சிறந்த பாத்திரமாகக் கருதலாம்.

**பாத்திரத்தின் பெயர்**

திருமலை நம்பிதாஸன் என்பது இவரது இயற்பெயராகும். ஆழ்வார்க்கடியான் என்பது இவருக்கு பட்டப்பெயராகும். ஏனெனில் திருமாலை மட்டும் உச்சரிக்கும் ஒரு தீவிர வைஷ்ணவ பக்தன் என்பதால் அவ்விதம் அழைப்பதுண்டு. அதுமட்டுமின்றி தன் குருவின் ஆணையை ஏற்று நடக்கும் சீடன் ஆவான். அதாவது நம்மாழ்வாரை குருவாக ஏற்றுக் கொண்டு பணி செய்யும் ஆழ்வாரைப் போல திருமலையும் தன் குருவான அநிருத்த பிரமரா யாரின் ஆணையை ஏற்று பணி செய்வது இ வரின் கடமையாகும். முதன் மந்திரி, செம்பியன் மாதேவி மட்டும் இவரை திருமலை என்று அழைப்பார்கள். மற்றவர்கள் இவரை வைஷ்ணவர் என்று அழைப்பதுண்டு.

**பாத்திரத்தின் அறிமுகம்**

ஆழ்வார்க்கடியானை ஒரு தீவிர வை ஷ்ணவ பக்தனாக ஆசி ரியர் நம்மிடம் அறிமுகம் செய்கிறார். அதுமட்டுமின்றி அவரை பருமனான தோற்றமுடையவனாகக் காட்சிப்படுத்துகிறார். ஒரு மதம் பிடித்த தீவிர வை ஷ்ணவர் என்று மக்கள் நம்பும் ஆளாக நாட்டில் மக்களோடு மக்களாக உலா வருகின்றான். அவனுடைய தோற்றம் சற்று பருமனாக குண்டாதி குண்டனாகும். இவன் ஒற்றன் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. சக்கரவர்த்தி முதன் மந்தி ரியான அநிருத்த பிரமரா யாரின் ரகசியமான ஒற்றன். இவன் ஒற்றன் என்று ஒரு சிலருக்குத் தெரியுமே யாருக்கு ஒற்றனாக உள்ளான் என்பதை யாராலும் இறுதி வரை கண்டுபிடிக்க முடியாத ரகசியமான ஒற்றனாவான்.

**ஒற்றனுக்குரிய தகுதியுடையவன்**

ஒற்றனுக்குரிய அனைத்து தகுதிகளும் உடைய பாத்திரம் ஆழ்வார்க்கடியானுடையது. ஆதித்த கரிகாலன் வந்திய தேவனிடம் தன் தந்தை , தமக்கை ஆகிய இரு வரிடமும் செய்தியை அளிக்கும்படி ஓலையை கொடுத்தனு ப்பினான் அவன் புதிய ஒற்றனாக வந்ததால் பலவித இன்னல்களுக்கு ஆளாக நேரிடுகிறது. ஆனால் ஆழ்வார்க்கடியனோ ஒற்றாடலை மிகச் சரியாக செய்து வந்தான்.

மேலும் ஆழ்வார்க்கடியான் யாரும் அறியாமல் ஒற்று அறிவதில் வல்லவன். சம்புவரையர் மாளிகையில் கந்தமாறன் நண்பரான வந்தியதேவன் எளிதில் நுழைய முடியவில்லை. ஆனால் வைஷ்ணவர் அதே நேரத்தில் ரகசிய கூட்டம் நடைபெறும் அரங்கிற்கு சு வரில் மேல் அமர்ந்திருந்தான். அவர்கள் பேசிய செய்தி அவனுக்கு சரியாக விழவில்லை என்பதால் வந்தியதேவனை பின்தொடர்ந்து செல்கின்றான். ஏனெனில் ஒற்று அறிவதில் ஐயமின்றி தெளிவாக ஆராய வேண்டும் என்பதால்தான். இதனை வள்ளுவர்,

> “மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
> ஐயப்பாடு இல்லதே ஒற்று” (குறள்.587)

என்ற அடிகளில் வலியுறுத்துகின்றார். மேலும் மதுராந்தகச் சோழராக வீற்றிருந்த மன்னன் கருத்திருமனுடன் செல்வதைப் பார்த்து ஆழ்வார்க்கடியான் வியப்பு அடைந்தான். ஆனாலும் அவ்விடத்தில் ஒன்றும் சொல்லாமல் உண்மையை தெளிவாக அறிய வேண்டும் என்று தன்னைக்

காப்பாற்றும்படி கத்தினான். இதனைக் கேட்ட கருத்திருமன் உடனே வந்து ஆழ்வார்க்கடி யானின் கட்டுக்களை அவிழ்க்கும் போது அவனைப் பிடித்து மிரட்டி உண்மையை அறிந்து தன் ஐயத்தைத் தீர்த்து கொண்டார். அதுமட்டுமின்றி அவர் சோழ குலத்தைச் சார்ந்தவர் இல்லையொன்றால் யார் செம்பியன் மாதேவியின் மகன் என்று வினவினான். செம்பியன் மாதேவியின் மகன் சேந்தன் அமுதன் என்பது ஆழ்வார்க்கடியானுக்கு தெரிந்திருந்த காரணத்தால்தான் இவ்விதம் அவர் கேட்டுள்ளார். இந்த ரகசியம் தன்னுடன் வந்திருக்கும் வீரர்களுக்குத் தெரியக்கூடாது என்பதால் தான் மட்டும் ரகசியமாக ராஜ காரியங்களை அறிந்து கொண்டது ஒற்றனின் புத்திக்கூர்மையைப் பாராட்டலாம்.

எதற்கும் அஞ்சாமல் இருக்கும் துணிவு ஒற்றனுக்கு வேண்டும். ஆழ்வார்க்கடியானிடம் அத்தகைய துணிவுடைமையை காணலாம். பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் செய்த கைசெய்கையை பார்த்த ஆழ்வார்க்கடியான் அவர்கள் பகைநாடான பாண்டிய நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதை அறிகின்றான். அவர்கள் எதற்காக இங்கு வந்துள்ளார்கள் , அவர்களின் நோக்கம் என்ன என்பதை அறிவதற்கு இருள் என்றும் பாராமல் பின்தொடர்ந்து செல்கின்றான்.

பிறர் மனதில் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிவதில் வல்லவன் ஆழ்வார்க்கடியான். இளவரசர் உயிருடன் இருக்கும் செய்தி சேந்தன் அமுதன் , பூங்குழலியைத் தவிர யாருக்கும் தெரியாது என்று வந்தியதேவன் நினைத்திருந்தான். இச்செய்தியை அவன் குந்தவையை பிராட்டியிடம் தெரிவிக்க நினைத்து அவளை சந்திக்க வந்தான். ஆனால் இவன் எதற்காக வந்துள்ளான் என்பதை சரியாக கணித் து விடுகின்றனான் ஆழ்வார்க்கடியான். வீணாகப் பேசாமல் இளவரசர் உயிருடன் இருக்கும் செய்தியை தெரிவித்து விடு என்று ஆழ்வார்க்கடியான் கூறுவதைக் கேட்டு வந்தியதேவன் வியப்பு அடைகின்றான். ஒரு ஒற்றனுக்கு ரிய தகுதி ஆழ்வார்க்கடியானிடம் இருக்கிறது என்று வந்தியதேவன் கூறுவதை,

“இந்த வை ஷ்ணவன், பரம்பரை ஒற்றன் போலும்: அதனால் ஒரு விதப் பரபரப்புமில்லாமல் சாவதானமாகத் தன் வேலையைச் செய்து வருகிறான் ” என்ற அடிகள் வழி அறியலாம். மேலும் , இளவரசர் உயிருடன் இருக்கும் செய்தி திருமலைக்கு தெரிந்திருந்தும் அதை தான் சொல்லாமல் வந்தியதேவனை தெரிவிக்கச் சொன்னதற்கு காரணம் தான் ஒற்றனாக இலங்கைக்கு அநிருத்த பிரமராயன் அனுப்பிய செய்தி குந்தவைக்கு மனத்துன்பத்தை அளிக்கும் என்றும் இளவரசரை அழைத்து வரும் பொறுப்பை குந்தவை வந்தியதேவனுக்கு அளித்த படியாலும் அச்செய்தியை தான் தெரிவிக்காமல் வந்தியதேவனை தெரிவிக்கச் செய்கின்றான்.

ஒரு இடத்திற்கு ஒற்றனாகப் போகும் போது அந்த இடத்தைப் பற்றி நன்கு அறிந்து செல்வது ஒற்றனுடைய கடமையாகும். ஆழ்வார்க்கடியானும் இலங்கைக்கு இளவரசரை காணச் செல்லும் வந்தியதேவனை அழைத்துக் கொண்டு காட்டின் வழியே சென்றான். காட்டின் வழியே சென்றால் கொடிய விலங்குகள் இருக்கும் என்று அவருக்குத் தெரியும். இருப்பினும் ராஜபாட்டை வழியாக சென்றால் வழி முழுவதும் சோதனை செய்வார்கள் குறித்த நேரத்திற்குள் இளவரசர் இருக்குமிடத்திற்குச் செல்ல முடியாது என்பதேயாகும்.

**ரகசியங்களைப் பாதுகாக்கக்கூடியவன்**

ஒற்றனாகத் தூது செல்லும் செய்தியை யா ரிடம் சொல்ல வேண்டுமோ அ வரிடம் மட்டுமே ஒற்றுச் செய்தியை கூற வேண்டும். மற்றவர்கள் அறியாதவாறு அச்செய்தியை பாதுகாப்பது ஒற்றனின் கடமையாகும். இதனை எல்லா இடங்களிலும் மிகச் சரியாக செய்தார் ஆழ்வார்க்கடியான். வந்தியதேவன் இளவரசரை காண இலங்கைக்குச் சென்றான். செல்லுகின்ற வழியில் சேனாதிபதி பூதிவிக்கிரம கே சரி அவனைக் கண்டு பழுவேட்டரையர் ஒற்றன் என்று சிறைப்பிடிக்கின்றான். அப்போது ஆழ்வார்க்கடியான் அவ ரிடம் வந்தியதேவனைப் பற்றி எடுத்துச்சொல்லி விடுவிக்கின்றார். இளவரசர் இருக்குமிடத்திற்கு உன்னை அழைத்துச் செல்ல தகுதியுடையவன் ஆழ்வார்க்கடியான் தான் என்று சேனாதிபதி வந்தியதேவனிடம் கூறுகின்றார். அதுமட்டுமின்றி ஆழ்வார்க்கடியான் இளவரசரை

காண எதற்கு செல்ல வேண்டும் என்ற ஐயம் தோன்றியது. ஆனால் காரணம் அவருக்குத் தெரியவில்லை. ஆழ்வார்க்கடியான் எச்செய்தியை கொண்டு செல்கின்றான் என்பதை கண்காணிக்கச் சொல்ல வந்தியதேவனிடம் ரகசியமாகக் கூறுகின்றார் சேனாதிபதி.

ஓரி என்று ஆழ்வார்க்கடியான் வந்தியதேவனைக் குறிப்பிட்டார். ஓ ரி என்றால் சிறு த்தைக்கு ஒற்றன் வேலை செய்யும் நரி என்று பொருளாகும். அதாவது காட்டில் நரியும் சிறுத்தையும் சேர்ந்து வேட்டைக்குச் செல்லும். சிறுத்தை ஓ ரிடத்தில் பதுங்கி இருக்கும். ஆனால் நரி அங்குமிங்கும் ஓடி இரைதேடும். மனிதனையோ அல்லது மானையோ கண்டால் நரியானது ஒற்றைக்குரலில் ஊளையிடும். இதனைக் கேட்ட உடனே சிறுத்தை இரையாக வரும் விலங்கை கொன்று விடும். சேனாதிபதி தனக்கு ஒற்றனாக வந்தியதேவனை அனுப்பியிருப்பதை அறிந்தே ஆழ்வார்க்கடியான் இவ்வாறு கூறுகிறார்.

**அபிநய பாஷை அறிந்திருத்தல்**

ஆழ்வார்க்கடியான் பி றரின் முகக்குறிப்பு , பாவனை செய்கை(சமிக்ஞை) இவற்றை வைத்து அவர்களின் நோக்கம் செயல் இவற்றை அறியக்கூடிய தன்மையுடையவனாக இருக்கின்றான். படகில் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளில் ஒருவன் காட்டிய கை சைகை (சமிக்ஞை) வைத்து அவன் பாண்டிய நாட்டை சேர்ந்தவன் என்பதை அறிகின்றான். அது மட்டுமின்றி ஊமைபெண் இலங்கையில் இளவரசரை தனியாக அழைத்து செய்கையினால் செய்த செயலை வைத்து அவள் என்ன சொன்னாள் என்பதையும் அறிந்து கொள்கின்றான். இளவரசரிடம் தனக்கு அபிநய பாஷை தெரியும் என்று கூறுவதை, "தங்களுக்குச் சித்திரங்களின் பா ஷை தெரியும். அடியேனுக்கு அபிநய பா ஷை தெரியும்" (பக்241) என்ற வரிகள் வழி அறியலாம்.

**பாரபட்சமின்றி நடத்தல்**

ஒற்றனுடைய கடமை என்னவென்றால் சுற்றத்தார் , பகைவர், அவர்களோடு தொடர்புடைய மக்கள் அனைவரையும் ஆராய்வதே ஒற்றாரின் தொழிலாகும். இதனை வள்ளுவர்,

"வினை செய்வார் தாம் சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று" (குறள்.584)

என்ற குறள் அடிகளில் கூறியுள்ளார். சோழர்களின் ஒற்றனான ஆழ்வார்க்கடியான் தன் சகோ தரியான நந்தினி, வந்தியதேவன், பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் இவர்களின் செய்கைகளைக் கண்காணிக்கின்றான். வந்தியதேவனை எதற்காகத் தொடர்ந்து வருகின்றான் என்ற உண்மை நமக்கு முதலில் தெரியவில்லை. அதன் பின்பு தான் காஞ்சியில் ஆதித்த கரிகாலன், மலையமான், பார்த்திப இவர்கள் பேசியதை கேட்டு வந்தியதேவனை பின்தொடர்கின்ற காரணம் ஆழ்வார்க்கடியான் தன் வாயலேயே கூற நமக்கு விளங்குகிறது.

**சமயப்பற்றுடையவன்**

சோழர் காலத்தில் சைவம் , வைணவம், சமணம் என்று பலவித சமயங்கள் தழைத்தோங்கியது. ஆதித்த சோழமன்னன் காவேரி உற்பத்தியாகின்ற இடம் தொடங்கி அவ்வாறு கடலில் கலக்கும் இடம் வரை அறுபத்து நாலு சிவாலயங்கள் எடுத்துள்ளார் என்ற செய்தியை ஒரு பெண் பாட்டாகப் பாடியுள்ளார். எனினும் மக்கள் மத்தியிலும் மன்னர்கள் மத்தியிலும் பெரும்பாலும் சைவத்திற்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அவ்வாறு இருக்க தான் கொண்ட சமயத்தில் மாறாது உறுதியுடன் இருந்தவர் ஆழ்வார்க்கடியான்.

பாண்டியருக்கும் சோழருக்கும் போர் நடைபெற்ற போது பாண்டியன் போர்க்களத்தை விட்டு ஓடி ஒளிந்து கொள்கின்றான். அவன் இருக்குமிடத்தை ஆதித்த கரிகாலன் எல்லா இடங்களிலும் தேடி அலைகின்றான். அவனால் பாண்டியனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் ஆழ்வார்க்கடியான் தன் சகோ தரிதான் பாண்டியனுக்கு அடைக்கலம் தந்துள்ளாள் என்பதைத் தெரிந்து கொள்கின்றான். பாண்டியன் இருக்குமிடத்தை ரகசியமாக ஆதித்த கரிகாலனுக்கு தெரிவிக்கின்றான். ஆதித்த கரிகாலன்

பாண்டியன் ஒளிந்திருப்பதை அறிந்து சென்று அவனது தலையை கொய்கின்றான். இதனை , “அந்தக் குரல் என் குரல்தான் அரசே! பகைவர் ஒளிந்திருந்த இடத்தைத் தங்களுக்கு மரத்தின் மறைவிலிருந்து சொன்னவன் நான்தான் ” (பக்.457) என்ற அடிகள் வழி அறியலாம். மேலும் , தன் தங்கை சோழ பகைவர்களுடன் சேர்ந்து சோழ வம்சத்தை அழித்து விடக்கூடாது என்பது அவனது எண்ணமாக இருந்தது. அதுமட்டுமின்றி தன் தங்கை வைணவத்தில் சேர்ந்து ஆண்டாளாக மாற வேண்டும் என்பதாகும்.

**உற்றுநோக்கும் திறன்**

ஒற்றனுடைய பார்வை மிக உன்னிப்பாக இருக்க வேண்டும். தம்மை சுற்றி என்ன நடக்கிறது என்பதை பார்வையால் கண்டறிய வேண்டும். அந்த வகையில் அழ்வார்க்கடியானின் பார்வையை கழுகுப்பார்வை என்று கூறலாம். அதாவது கழுகானது மிக உயரத்தில் பறந்தாலும் தன்னுடைய இரையை தெளிவாகக் கண்டு அதனைக் கவர்ந்து கொண்டு போகும். அதைப்போல் திருமலையும் இலங்கையில் பார்த்திபனுடன் மற்ற இருவர்களையும் பார்த்த உடனே அவர்கள் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் என்பதையும், யானை மீது ஏறிச்செல்பவர் இளவரசர் தான் யானைப்பாகன் வேடத்தில் செல்கிறார் என்பதையும் பழு வூர் இளையராணி தான் கடம் பூர் சம்பவரையர் மாளிகைக்கு சென்று கொண்டிருக்கிறார் என்று அனைவரும் நம்பும்போது திரை விலகிய போது அது இளவரசர் மதுராந்தகச் சோழர் என்பதையும் அடையாளம் கண்டு கொள்கிறான். அதுமட்டுமின்றி கருத்திருமனுடன் மதுராந்தகச் சோழன் தான் செல்கிறார் என்பதை இருளில் தெளிவாகக் கண்டுகொள்கிறான். மேலும், இளவரசர், வந்தியதேவன், ஆழ்வார்க்கடியான் இவர்கள் மூவரையும் அழைத்து கொண்டு இலங்கையில் ஊமை பெண் யானைக் கூட்டத்தித்தை நோக்கி சென்றாள். அதனைக் கண்டு வந்தியதேவன் அஞ்சினான். ஆனால் ஆழ்வார்க்கடியானுக்கு அது சிலை என்று தெரிந்து கொண்டான்.

**முதற்பகைவனாகக் கூறுதல்**

பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் பள்ளிப்படையில் ரவிதாஸன் , இடும்பன்காரி, சோமன்சாம்பவன் ரகசியமாக சந்தித்துப் பேசிக்கொண்டார்கள். அப்போது இடும்பன்காரி வழியில் ஒரு வைணவரே பார்த்ததாகவும் அ வரிடம் கை செய்கை செய்தாகவும் கூறுகின்றான். அதுமட்டுமின்றி சம்புவரையர் மாளிகையில் ரகசிய கூட்டம் நடைபெற்ற இடத்தில் இருந்ததாகவும் சொல்கின்றான். மன்னரைக் கொல்லும் அளவிற்கு திட்டமிடும் ரவிதாஸன் நாட்டின் ஒற்றனை நினைத்து கோபமும் பயமும் கொள்கின்றான். ஏனெனில் பழுவேட்டரையர் அரண்மனையில் உள்ள நந்தினி தேவியிடம் இவன் சென்று பேசினால் அவள் மனது மாறிவிடுவாள். அதன்பின்பு சோழவம்சத்தை அழிக்க முடியாது என்று எண்ணி ஆழ்வார்க்கடியானை முதல் எதி ரியாகக் கருதினான். மேலும் நம்முடைய ரகசியங்களை அவன் அறிந்து கொண்டால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்பதாலும்தான். மற்றவர்களை விட நமக்கு முதல் எதி ரி, முதன்மையான எதி ரி அவன்தான் என்று கூறுகின்றான். அவனை மறுமுறை கண்டால் கொன்றுவிடும்படி மற்றவர்களிடம் கூறுகின்றான்.

**முடிவுரை**

ஒரு வைணவ சமயத்தைச் சார்ந்தவராக நாட்டில் உலாவி வரும் ஆழ்வார்க்கடியான் ராஜதந்திரங்களை நிதானமாக யோசிக்கும் புத்தி உடையவராகவும் நகைச்சுவை கலந்த பாத்திரமாகவும் முன்னால் நடப்பதை முன்கூட்டியே அறிந்தவனாக இருந்தாலும் அதை யா ரிடமும் காட்டிக் கொள்ள விரும்பாதவனாகவும் ஒரு கா ரியத்தை எடுத்தால் அக்கா ரியம் நிறைவேறாமல் திரும்பி வருவது ஒற்றனுக்கு தகுந்தது அல்ல என்று நினைத்து அக்கா ரியத்தை நிறைவேற்றும் பாத்திரமாகவும் படைக்கப்பட்டுள்ளான்.

**அடிக்குறிப்பு**

1. கி.வா.ஜகந்நாதன், தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு சங்கம், முதற்பதிப்பு, சென்னை, 1966.

2. கி.வா.ஜகந்நாதன், தமிழ் நாவல்கள், தமிழ்ப் புத்தகலாயம், முதற்பதிப்பு, சென்னை, 1966.
3. அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, திருநெல்வேலி தென்னிந்திய பிரைவேட் கழகம், சென்னை, ஏழாம்பதிப்பு, 1981.